மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 55/19

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஆறுமுகக்கனி | தேதி : 26.02.26
வயது : | க/பெ : கனகராஜ்
கிராமம் : | தொழில் :
மாவட்டம்:

---

**26.02.26 குறுக்கு விசாரணை**

1.என் சொந்த ஊர் வரதராஜபுரம் கிராமம், சாமிநாதபுரம் ஆகும். நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் 1998 ல் இருந்து சென்னையில் வசித்து வருகிறேன். அவ்வப்போது சொந்த ஊருக்கு வருவேன். என் உடன்பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 5 பேர். அனைவரும் வெளியூரில் தான் வேலை பார்த்து வருகின்றனர் என்றால் ஆம். அவ்வப்போது சொந்த ஊருக்கு வருவோம். நாங்கள் வருடத்திற்கு 2, 3 தடவை சொந்த ஊருக்கு வருவோம்.

2.ஆணையர் அளவீடு செய்தபோது நான் உடன் இருந்தேன். ஆணையரின் அளவீட்டில் ஒருசில அளவுகள் விடுபட்டதாக ஆட்சேபனை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். ஆணையர் பல அளவுகளை கொடுக்கவில்லை என்று ஆட்சேபனையில் சொல்லியிருந்தோம் என்றால் சரிதான். தாவா வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2016 ல்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.26 21:03:48 +0530

தாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞருக்கு வழக்கு பற்றி விபரங்களை யார் சொன்னார் என்றால் என் தாயார் சொன்னார்.

3.வழக்கு சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை வடகரையில் உள்ள பாலகிருஷ்ணனிடம் கிரையம் வாங்கியதன் அடிப்படையில் பாத்தியம். அந்த ஆவணம் வா.சா.ஆ 1 தானா என்றால் ஆம். வா.சா.ஆ 1ன் படியான கிரையத்திற்கு அதில் கண்ட சொத்து பாலகிருஷ்ணனுக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1ல் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது.

4.வா.சா.ஆ 2 அடைமான ஆவணத்தில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2015க்கு முன்பே 1ம் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அப்போது 1ம் 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லையா என்றால் ஆக்கிரமிக்க வந்தார் நாங்கள் மறித்துவிட்டோம். எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 85/54 ஆகும். வா.சா.ஆ 3 கூட்டு பட்டாவில் 8 பேர் பெயர் உள்ளது என்றால் சரிதான். அது பற்றி எனக்கு புரியவில்லை.

5.வா.சா.ஆ 3 ல் என் அப்பா பெயரை தவிர மற்ற பெயர்களை நீக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் தெரியவில்லை. சர்வே எண் 85/54 A முதல் E ஆக உட்பிரிவு செய்யப்பட்ட விரபம் ஆணையர் அளக்கும்போது தான் எனக்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.26 21:03:52 +0530

தெரியுமா என்றால் ஆம். சர்வே எண் 85/54D ல் உட்கண்ட 1.60 ஏர்ஸ் மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. ஆணையர் ஆணையர் அறிக்கையை எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தாரா என்றால் ஆம்.

6.வழக்கு தாக்கல் செய்யும் முன்பு தாவா சொத்தினை அளவீடு செய்தோமா என்றால் ஆம். அப்போது 8 செண்ட் இருந்தது. எந்த மாதம், தேதி, வருடத்தில் அவ்வாறு அளவீடு செய்தோம் என்று வழக்குரையில் சொல்லியிருந்தோமா என்றால் இல்லை. ஞாபகம் இல்லை. எத்தனை வருடத்திற்கு முன்பு அளவீடு செய்தோம் என்றால் 2015 க்கு முன்பு அளவீடு செய்தோம். புல எண் 85/54 ல் 1ம் பிரதிவாதி பெயர் கூட்டாக உள்ளது என்றால் ஆம். 9 வது பெயராக உள்ளது. ஆனால் எந்த ஆவணத்தின் அடிப்படையில் அவர் பெயர் வந்தது என்று தெரியாது.

7.1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு புல எண் 85/54 ல் அவருக்கு எப்படி பாத்தியம் என்பதற்கு வில்லங்கசான்றிதழ் எதுவும் போட்டு பார்த்தோமா என்றால் இல்லை. எங்களுக்கு 8 செண்ட் உள்ளது. வழக்குரையில் 1ம் பிரதிவாதி எந்த மாதம், தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார் என்று சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதியிடம் ஊர்க்காரர்களில் யாரை வைத்து ஆக்கிரமிப்பை அகற்ற கேட்டுப்பார்த்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

8.எங்களுடைய சொத்தில் 1ம் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக எனது வழக்கறிஞர்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.26 21:03:56 +0530

சொன்னாரா என்றால் ஆம். 1ம் தபசில் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எத்தனை செண்ட் என்றால் 8 செண்ட் ஆகும். அதன் ஒரு பகுதிதான் 2ம் தபசில் சொத்து என்றால் சரிதான். அது தென்கிழக்கு பகுதியாகும். தென்கிழக்கு பகுதியில் 1ம் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண் 85/54ல் கூட்டு பட்டாவில் என் பெயர், என் அம்மா பெயர், என் சகோதரர்கள் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து எங்களுக்கு முழுவதும் பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

9.புல எண் 85/54 உட்பிரிவு ஆகி வேறு வேறு நபர்கள் அனுபவத்தில் உள்ளதால் எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புல எண் 85/54 ல் உட்பிரிவு செய்யப்பட்ட புல எண்ணில் கண்ட நபர்களை சேர்க்காததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சொத்துக்கும், வழக்கு சொத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

10.காலம் கடந்து 2019ல் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2016லேயே வழக்கு தாக்கல் செய்துவிட்டோம். நாங்கள் கேட்டுள்ள செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தந்தை வார்டு கவுன்சிலர் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் தந்தை நாங்கள் ஆக்கிரமிப்பு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.26 21:03:59 +0530

செய்துள்ளதாக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான்.

11.1 ம் பிரதிவாதியின் தந்தைக்கும், 4 ம் பிரதிவாதிக்கும் ஏற்கனவே ஒரு பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.26 21:04:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.